**ஆகஸ்ட் - 10**

**"ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்.**

**- பிலி 2 : 1, 2.**

ஒற்றுமைக்கும், சமாதானத்துக்கும், சகோதர சிநேகத்திற்கும் இவைகள் எவ்வளவு பெரிய புத்திமதியாயிருக்கின்றன. எப்படி இவைகள் நமக்கு பொறுமையையும், சகிப்புத்தன்மையையும், சாந்த குணத்தையும், மற்றவர்களுக்கு உதவியாயிருப்பதையும் சபையில் ஒருவர் மற்றவருக்கு ஆறுதலாக இருத்தலையும் குறிப்பாகச் சொல்லுகின்றன. ஏனென்றால், இந்த விதமாக கர்த்தருடைய ஆவி எல்லோரிலும் நிறைந்திருக்கும் . ஏனென்றால், ஒவ்வொருவரும் சரியான வழியில் மிகப்பெரிய சாத்தியமான முன்னேற்றத்தை அடையலாம். பிரியமுள்ள சகோதரரே, சகோதரருக்கு ஆறுதல் சொல்லுகிறவனாயிருந்த பர்னபாவின் பேருக்கு அதிகதிகமாக பாத்திரவான்களாயிருப்போமாக. பரிசுத்த ஆவி நம்மில் மிகுதியாயிருப்பதாக. ஏனென்றால், அது நமக்குள்ளே பரிபூரணமாக வாசமாயிருந்து நாமெல்லோரும் சியோனில் ஆறுதலின் குமாரராகவும், குமாரத்திகளாகவும், நம்முடைய பிதாவின் பிரதிநிதிகளாகவும், பரிசுத்த ஆவியின் சத்தியத்தின் வழியாகவும் இருக்க வேண்டுமென்பதே கர்த்தருடைய தயையுள்ள சித்தமாயிருக்கிறது. **- Z ’04, 296(R 3434)**

எவர்களுக்கு ஊழியஞ்செய்கிறார்களோ, அவர்களுடைய ஆவிக்குரிய செழிப்பைவிட வேறொன்றும் கர்த்தருடைய ஊழியக்காரருக்கு அதிகப் பிரியமானதாய் இருக்காது. ஏனென்றால், அவர்கள் தங்களுடைய சேஷமத்திற்காகவே அவர்கள் உழைக்கிறார்கள். அவர்களுடைய முடிவான ஜெயத்திற்காகவே அவர்கள் தங்களுடைய உயிரைக் கொடுக்கிறார்கள். யார் தங்களுக்கு ஊழியஞ்செய்கிறார்களோ, அவர்களுடைய இருதயங்களை சந்தோஷப்படுத்த முயற்சி செய்வதற்குக் கர்த்தருடைய ஜனங்களை இந்த எண்ணம் ஏவவேண்டும். ஆவியின் செழிப்பான கனிகள், விசேஷமாக அன்பின் பற்பல வகைகளில், தங்களுடைய ஆவிக்குரிய பிள்ளைகளில் ஏராளமாக வளர்வதைக் காண்பதில், கர்த்தருடைய ஊழியக்காரர் மகிழ்ச்சியடைவார்களாக. ஆகவே ஆவியின் பிரகாரமானதாயும் பிள்ளைகளும் சேர்ந்து கர்த்தரில் மகிழ்ச்சி அடைவார்கள். **- P ’33, 111.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**2கொரி 13:14; யோவா 7:39; 1யோவா 3:24; பிலி 1:8; கொலோ 3:12; யோவா 3:29; ரோம 12:16; 1கொரி 1:10; பிலி 3:16; 2கொரி 13:11; பிலி 1:26,27.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 362 (R 5810)**

**வினாக்கள் : இந்த வசனம் சம்பந்தமாக இந்தவார அனுபவங்கள் எவை? அவை என்ன பதில் அளித்தன?**